# நூலகத்தை நோக்கி ஒரு பயணம்

dvb யின் „எல்லோருக்குமான நூலக சலுகைகள்“ எனும் அசையும்படதிற்கான திரைக்கதை.

1. பெரியவரும், சிறுவனும் நூலகக் கதவைத் திறந்து உள்ளே சென்றதும் ஆச்சரியமடைகின்றார்கள்.

2. பெரியவர்: ஓ! பார்த்தாயா? இங்கே எவ்வளவு நூல்கள் இருக்கின்றன? நிறையப் பேர் நிற்கிறார்கள்.

3. சிறுவன்: அங்கே பாருங்கள்! நூலகர் ஒருவர் நிற்கின்றார். அவர் எங்களுக்கு நிச்சயமாக உதவிசெய்வார்.

4. நூலகர்: வாருங்கள்! நான் எந்தவிதத்தில் உங்களுக்கு உதவிசெய்ய முடியும்?

5. பெரியவர்: இது என்னுடைய அடையாள அட்டை. நாங்கள் சில நூல்களை இரவலாக எடுத்துச்செல்ல விரும்புகின்றோம்.

6. நூலகர் அவர்களது விபரங்களைக் கணனியில் பதிந்துவிட்டு, நூலக அடையாள அட்டை ஒன்றைப் பெரியவரிடம் கொடுக்கின்றார்.

7. நூலகர்: இதைக்கொண்டு நீங்கள் நூல்களையும், ஏனைய நூலக சாதனங்களையும் இரவல் எடுக்கலாம்.

8. பெரியவரும், சிறுவனும் நூலகத்தைச் சுற்றிப் பார்க்கிறார்கள்.

9. அங்கே நூல்கள் நிறைந்த நிலைப்பெட்டகங்கள் இருக்கின்றன. நூல்களைத் தேடிப்பார்த்து எடுத்து வாசித்துப்பார்க்கும் மக்களும் நிறைந்திருக்கின்றார்கள். அத்தோடு திரைப்படங்களும், இறுவட்டுக்களும் அங்கே இருக்கின்றன.

10. சிறுவன்: இங்கே பாருங்கள்! இது என் விருப்பத்திற்குரிய திரைப்படம்! இதை நான் இரவலெடுக்க விரும்புகின்றேன்.

11. இருவரும் குழுவாக இருந்து வாசித்துக்கொண்டிருந்தவர்களைத் தாண்டிச் செல்கின்றார்கள். அவர்களில் ஒருவர் செய்தித்தாள் ஒன்றை வாசித்துக்கொண்டிருக்கின்றார். தனக்குத் தேவையான தகவல்களை இணையத்தளத்தில் தேடிக்கொண்டிருக்கும் ஒருவரையும் அங்கே அவர்கள் காண்கின்றார்கள்.

12. இங்கே ஒருவர் பிள்ளைகளுக்குக் கதை வாசித்துக் காட்டிக்கொண்டிருக்கின்றார். சிறுவர்கள் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

13. சற்றுத்தள்ளியுள்ள மேசைகளில் இருப்பவர்கள் வாசித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கின்றார்கள்.

14. பெரியவர் தனக்கான நூலை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

15. பெரியவர்: வாங்கோ!

16. அவர் அங்கே ஒர் ஏணியில் நின்றிருந்த நூலகரை அணுகுகிறார்.

17. பெரியவர்: இந்தப்புத்தகம் எங்கிருக்கின்றதென்று எனக்குத் தெரியவில்லை.

18. நூலகர்: என்னுடன் வாங்கோ!

19. அவர்கள் அந்த நூலைக் கண்டுபிடிப்பதற்கு, பல நூல்களடங்கிய நிலைப்பெட்டகங்களைத் தாண்டிச் செல்கின்றார்கள்.

20. நூலகர்: இதோ! நீங்கள் தேடிய நூல் இங்கிருக்கின்றது!

21. பெரியவர்: மிக்க நன்றி!

22. இருவரும் இரவலெடுக்குமிடத்திற்குச் செல்கின்றனர். அவர்கள் தாம் எடுத்த நூலையும், திரைப்படத்தையும் நூலக அடையாள அட்டையையுடன் சேர்த்து நூலகரிடம் கொடுக்கின்றார்கள். அவர் அந்தச் சாதனங்களைப் பதிவுசெய்துவிட்டு அவர்களிடம் கொடுக்கின்றார். நூலக சாதனங்களை அவர்கள் எப்பொழுது மீளக் கையளிக்கவேண்டுமென்ற கால வரையறையை அவர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

23. பெரியவரும், சிறுவனும் விடைபெற்றுச் செல்கின்றார்கள். அவர்கள் நிச்சயம் மீண்டும் நூலகத்திற்கு வருவார்கள்!

Text: Bibliomedia Schweiz/April 2016
Übersetzung: sugirtha Shanmuganathan